திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கைத்தறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல் வேறு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்கெனவேயே இங்கே செயல் பட்டுக் கொண்டிருக்கின்றனவே, அவைகளிலே இவர்களைப் பணியில் அமர்த்தி, இவர்களைப் பயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, எங்கே பயன்படுத்திக் கொண் டாலும் இந்த ஆபத்து என்றைக்கும் வரும். வேலை வாய்ப்புத் துறை மூலமாக வேலை பெற வேண்டுமென்ற ஒரு முறை இருக் கிறது. அது போல தேர்வாணைக் குழுவின் மூலமாகத் தேர்ந் தெடுக்கப்படுகின்ற இன்னொரு முறை இருக்கிறது. ஆகவே, எங்கே இவர்கள் நியமிக்கப்பட்டாலும் தேர்வாணைக் குழு வின் பட்டியல் வெளியே வந்ததற்குப் பிறகு இவர்கள் எங்கேயும் 6 மாதம், 8 மாதம் அல்லது ஓராண்டு தான் பணியில் இருக்க வேண்டிய நிலைமை வரும். ஆகவே, எங்கே நியமிக்கப்பட்டா லும் அங்கேயும் இப்படிப்பட்ட நிலை வரத்தான் செய்யும். அதற்காகத்தான் தற்காலிகம் என்று சொல்லி நியமிக்கிறோம். அந்த வகையில் அவர்களை நேரடியாக நியமிக்கின்றோம். ஆனால் நிரந்தரமாக நியமிக்கத்தான் தேர்வாணைக் குழுவை நாம் வைத்திருக்கிறோம். தேர்வாணைக் குழு மூலம் நியமிக்கப் படுகின்ற அப்படிப்பட்ட நிலைமைகள் வேண்டாம், நாம் யாரை வேண்டுமானாலும் தற்காலிகமாக நியமிக்கலாம் அல்லது நிரந் தரமாக நியமிக்கலாம் என்கின்ற நிலைமைக்கு நாம் வந்தால் என்னென்ன, எது எது நடைபெறும் என்பதைப் பற்றி உறுப் பினர்களுக்கு நன்றாகத் தெரியும். விதி முறைகள் கட்டிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காகவும், வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்கின்ற நிலைமைகள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவும் நாம் இதை எல்லாம் கடைபிடிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(உ) இராசபாளையத்திலுள்ள மகப்பேறு மருத்துவமனையிலுள்ள அசுத்தமான நிலைமை.

திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, ''சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கும், அரசுக்கும் பல முறை முறையிட்டும் இராசபாளையத்திலுள்ள அரசு மகப் பேறு மருத்துவமனை மிக அசுத்தமாக பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கும் நிலையில் இருப்பதும் மற்றும் இராசபாளையம் ஒன்றியத்தைச் சார்ந்த ஜமீன் கொல்லங்கொண்டாவிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் அடிப்படை வசதி இல்லாததும் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற் குக்கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

இராஜபாளையம் நகரிலுள்ள அரசினர் மகப் பேறு மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் இல்லாததினால், சுற்றுப்புறமுள்ள மக்கள் அதை கழிப்பிடமாக பயன்படுத்துகிறார்கள் என்றும் மற்றும் சுற்றித் திரிகிற நாய், பன்றி, கழுதை போன்ற மிருகங்கள் மருத்துவமனைகளில் நுழைகின்றன எனவும், இதனால் சுகாதாரக் கேடு உள்ளது என பொது மக்களும் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முறையிட்டதின் பேரில் அம்மருத்துவமனையைச் சுற்றி சுற்றுச் சுவர் கட்டினால் மேற் குறிப்பிட்ட குறைகளை களைந்து மருத்துவமனையை சுத்தமாக பராமரிக்க முடியும் எனக் கருதி ரூ. 90,000 மதிப்பீட்டில் அம்மருத்துவமனைக்கு சுற்றுச் சுவர் கட்டும் செயற் குறிப்பு அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது. இச் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. இது குறித்து ஆணை வெகு விரைவில் வெளியிடப்பட உள்ளது.

இராஜபாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த ஜமீன் கொல்லக்கொண்டாவில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு அடிப்படை வசதிகளான 6 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. பொது மற்றும் நடமாடும் மருத்துவக் குழு தேவைகளுக்காக ரூபாய் 20,000 மும் மற்றும் அதற்கு மேலும் மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு மருந்தக கட்டிடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. தண்ணீர் வசதி இருக்கின்றது. மேலும் எந்தப் பற்றாக்குறை குறித்தும் எந்தவிதமான தகவலும் அரசால் பெறப்படவில்லை. மேலும் இந்த ஆரம்பச் சுகாதார நிலையத்திற்காக ஏற்படுத்தப்பட்ட பணியிடங்களில் மூன்று மருத்துவ அதிகாரிகளும், ஏனைய பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டு பணியாற்றி வருகிறார்கள்.

*திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 90 ஆயிரம் மதிப்பீட்டில் சுற்று சுவர் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கனவே, பல ஆண்டுகளாகிவிட்ட நிலையில், எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் மருத்துவமனையைச் சுற்றி சுவர் கட்டி மருத்துவமனையைச் சுகாதாரமாக வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா ? இன்றைக்கு அந்த ஆஸ்பத்திரியை சுற்றி முட்செடிகளும், புதர்களுமாய் நிறைந்து காணப்படுகிறது. இதை வெட்டி சுத்தம் செய்வதற்குக் கூட பொதுப் பணித் துறைக்கோ அல்லது மருத்துவத் துறைக்கோ அவர்களுடைய நிதி ஒதுக்கீட்டில் நிதி ஒதுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். சுற்றுச் சுவர் கட்டும் வரையில், ஆஸ்பத்திரியைச் சுற்றியுள்ள இடத்தைச் சுத்தம் செய்ய அரசு ஏற்பாடு செய்யுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையிலே, விரைவிலே அரசு ஆணை பிறப்பிக்கும் என்று இருக்கிறது. எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் அங்கே சுற்றுச் சுவர் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கி. ராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமீன் கொல்லங் கொண்டாவிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையத்திலுள்ள நிலைமை பற்றி ஏற்கெனவே புகார்கள் வந்திருக்கின்றன. அங்கே உள்ள உண்மை நிலைமை என்னவென்றால், ஆறு, படுக்கைகளிலே மெத்தை கிடையாது. வெறும் துருப்பிடித்த இரும்பு கட்டில்கள் மட்டும் உள்ளன. இருக்கின்ற மெத்தைகளை உபயோகப்படுத்த முடியாத நிலையில், நிராகரிக்கப்பட்டு விட்டன. பெட் ஷீட்டுகள் கிடையாது புதிய பெட் ஷீட்டுகள் வாங்க நிதி ஒதுக்கீடும் கிடையாது. அதோடு, நான் நேரில் சென்று பார்த்தபோது பிரசவத்திற்காக. அங்கே சேர்க்கப்பட்டிருந்த ஒரு அரிசன பெண்மணி, தன்னுடைய சேலையாலேயே தன் உடம்பை மூடிப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தார். அது போல, அங்கேயுள்ள நோயாளிகளே சில மருந்துகளையும், குளுக்கோஸ் பாட்டிலையும் வெளியிலேயிருந்து வாங்கிக் கொண்டு வரக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் பற்றியெல்லாம் எழுத்து மூலமாக மருத்துவமனை அதிகாரிக்கும், மாவட்ட சுகாதார அதிகாரிக்கும் புகார்கள் எழுதியும், இதுவரை எனக்கு எந்த விதமான பதில் வரவில்லை. இத்தகைய நிலைமைகளை மாற்றியமைக்க, அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற கட்டில்களுக்கு மெத்தை இல்லை என்று சொன்னார்கள் அதை அரசு நிச்சயம் சீக்கிரத்தில் வாங்கித்தரும் கேட்டால் செய்யப்படும். போர்வை இல்லை என்று சொன்னார்கள். அதுவும் வாங்கித் தரப்படும். மருந்து இல்லை என்று சொன்னார்கள் அதைத்தான் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருபதாயிரம் ரூபாய்க்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் மருந்து வாங்கிக் கொடுக்கிறோம். மருந்துகள் அதிகம் இருக்கின்றன என்ற பிரச்சினையே தவிர, இல்லை என்ற பிரச்சினை இல்லை அப்படி எங்கேயாவது தமிழ்நாட்டில் எந்தவொரு மருத்துவமனையிலேயாவது அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திலேயாவது மருந்து இல்லை என்று எந்த மருத்துவராவது சொல்வாரேயானால் அதை உடனே வாங்கிக் கொள்வதற்கும் அனுமதி அளித்திருக்கிறோம். மருந்து இல்லை என்றால் கடைத்தெருவிலே வாங்கிக் கொள்ளலாம் வாங்கி பில்லைக் கொடுத்து விடலாம். அந்த அனுமதியையும் பயன்படுத்தாமல், மருந்து இல்லை என்று நோயாளிகளிடம் சொல்லுகின்ற மருத்துவர்கள் யாரேனும் இருந்து, அதுபற்றி புகார் கொடுப்பாரேயானால் இப்பொழுதே சொல்கிறேன், அந்த மருத்துவர் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்படுவார்.

(ஊ) பள்ளியிறுதித் தேர்வு அறிவியல் வினாத்தாள் வடிவமைப்பினை மாற்றியதால் மாணவர்கள் பாதிப்பு.

மண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரா. தாமரைக்கனி, மெ. ஆண்டி அம்பலம, எ. தெய்வநாயகம், கே. சுப்பராயன், மா. மணிமாறன், ஜெ. கே. ஜி. பாரதி, ஆகி